## <u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>
## <u>மேட்டூர் நகராட்சி</u>

நிகழும் ஸ்ரீ சுபகிருது வருடம் வைகாசி மாதம் 9 ம் தேதி ஆங்கில ஆண்டு 23.05.2022 ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் சாதாரண கூட்டம் நகர்மன்ற தலைவர் தலைமையில் நடைப்பெற்றது.

**நாள் : 23.05.2022**
**இடம்: மேட்டூர் அணை.**

**நகர்மன்ற தலைவர்,**
**மேட்டூர் நகராட்சி.**

**<u>மன்றப்பொருள்</u>**

**1.** நகராட்சி ஆணையாளரின் மே–2022 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண் 39 நாள் 23.05.2022**
**பதிவு செய்யப்பட்டது**

**2.** அரசாணை நிலை எண்.52 நாராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.30.03.2022 நாராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்.01.04.2022 மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 81 A மற்றும் அட்டவணை 4–ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சொத்துக்களின் சொத்துவரியினை 01.04.2022 முதல் மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டு கீழ்கண்டவாறு மண்டல அடிப்படை மதிப்பு உயர்வு செய்யப்பட்டு இதன் விவரங்கள் யாவும் பொதுமக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் 30 நாட்களுக்குள் சமர்ப்பிக்ககோரி 13.04.2022 அன்று பொதுமக்கள் அறியும் படி தினசரி நாளிதழ்கள் மற்றும் நகராட்சி இணையதளம், அறிவிப்பு பலகை ஆகியவற்றில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி கால அளவான 30 நாட்கள் முடிந்தபின்னரும் 18.05.2022 வரையிலும் சொத்துவரி சீராய்வு தொடர்பாக நகராட்சிக்கு வரி செலுத்துவோரிடமிருந்து கீழ் காணும் ஐந்து ஆட்சேபனை விவரப்படி மனுக்கள் வரபெற்றுள்ளது.

| வ.எண் | நாள் | பெயர் | புகார் விவரம் |
|---|---|---|---|
| 1 | 28.04.2022 | மேட்டூர் அனைத்து வணிகர்கள் மற்றும் வரிசெலுத்துவோர் நலச் சங்கம் | சொத்துவரியின் மண்டல அடிப்படை மதிப்பை உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதை மாற்றி குறைத்து மதிப்பீடு |

| | | | |
|---|---|---|---|
| | | | செய்ய தீர்மானம் போட வேண்டுல் |
| 2 | 06.05.2022 | எம்.என்.மணிகண்டன்<br>ராமன்லாட்ஜ்<br>8/22எ/,8.22பி,சதுரங்காடி,<br>மேட்டூர் அணை.1 | சொத்துவரி உயர்வு குறைப்பு செய்ய |
| 3 | 06.05.2022 | எம்.என்.ஹரிகிருஷ்ணன்<br>சப்தரிஷி<br>ஐயர்கல்யாணமஹால்,சதுரங்காடி,<br>மேட்டூர் அணை.1 | சொத்துவரி உயர்வு குறைப்பு செய்ய |
| 4 | 06.05.2022 | எம்.எஸ்.நடராஜன்,<br>சப்தரிஷிவளாகம்,8/12,சதுரங்காடி,மேட்டூர் அணை.1 | சொத்துவரி உயர்வு குறைப்பு செய்ய |
| 5 | 06.05.2022 | எம்.என்.கிருஷ்ணன்,<br>கிருஷ்ணாலாட்ஜ்,127/10,சதுரங்காடி,<br>மேட்டூர் அணை.1 | சொத்துவரி உயர்வு குறைப்பு செய்ய |

அரசு உத்திரவின் படி இந்நகராட்சியின் நிதி நிலைமையை கருத்தில் கொண்டு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.23 நாள்.11.04.2022–ல் அனுமதிக்கப்பட்டவாறு 01.04.2022 முதல் சொத்துவரி மற்றும் காலிமனை வரிகளுக்கான மண்டல அடிப்படை மதிப்பினை உயர்வு செய்து பொதுவரி சீராய்வு மேற்கொள்ளவும் மேலும் சொத்துவரி /காலிமனை வரியில் ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின்(GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து வரி சீராய்வு மேற்கொள்ளவும் இந்நகர்மன்றம் அனுமதித்தபடி கீழ்கண்டவாறு சொத்துவரி, காலிமனைவரி உயர்வு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**சொத்துவரி**

| **வ. எண்.** | **தற்போதைய மண்டலம்** | **தற்போதைய மண்டல மதிப்பு** | **புதியதாக நிர்ணயம் செய்யப்படும் மண்டல மதிப்பு** | | |
|---|---|---|---|---|---|
| | | | **பரப்பளவு (ச.அடி)** | **உயர்வு செய்வதற்கான காரணி** | **புதிய மண்டல மதிப்பு (ரூ.) ஒரு சதுர அடிக்கு** |
| | | | **குடியிருப்பு** | | |
| 1 | A | 1.50 | 1 முதல் 600 ச.அடி வரை | 1.25 | 1.88 |
| | | | 601 முதல் 1200 ச.அடி..வரை | 1.5 | 2.25 |
| | | | 1201 முதல் 1800 ச.அடி.வரை | 1.75 | 2.63 |
| | | | 1801க்கும் மேல் | 2 | 3.00 |
| | | | **குடியிருப்பு இல்லாதவை** | | |
| | | | தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடங்கள் | 1.75 | 2.63 |
| | | | வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 | 3.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 | 2.63 |
| 2 | B | 0.90 | **குடியிருப்பு** | | |
| | | | 1 முதல் 600 ச.அடி வரை | 1.25 | 1.13 |
| | | | 601 முதல் 1200 ச.அடி..வரை | 1.5 | 1.35 |
| | | | 1201 முதல் 1800 ச.அடி.வரை | 1.75 | 1.58 |
| | | | 1801க்கும் மேல் | 2 | 1.80 |
| | | | **குடியிருப்பு இல்லாதவை** | | |
| | | | தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடங்கள் | 1.75 | 1.58 |
| | | | வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 | 1.80 |
| | | | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 | 1.58 |
| | | | | | |
| 3 | C | 0.60 | **குடியிருப்பு** | | |
| | | | 1முதல் 600 ச.அடி வரை | 1.25 | 0.75 |
| | | | 601 முதல் 1200 ச.அடி..வரை | 1.5 | 0.90 |
| | | | 1201 முதல் 1800 ச.அடி.வரை | 1.75 | 1.05 |
| | | | 1801க்கும் மேல் | 2 | 1.20 |
| | | | **குடியிருப்பு இல்லாதவை** | | |
| | | | தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடங்கள் | 1.75 | 1.05 |
| | | | வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 | 1.20 |
| | | | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 | 1.05 |

**காலிமனைவரி**

| வ.எண் | தற்போதைய மண்டலம் | மண்டல மதிப்பு ரூ. | புதியதாக நிர்ணயிக்கப்படும் மடண்டல மதிப்பு | | |
|---|---|---|---|---|---|
| | | | பரப்பளவு சதுர அடி | உயர்வு செய்வதற்கான காரணி | புதிய மண்டல மதிப்பு ரூ. |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | A | 0.15 | – | – | 0.30 |
| 2 | B | 0.20 | – | – | 0.40 |
| 3 | C | 0.30 | – | – | 0.60 |

**01.04.2022ல் வரி விதிப்பு செய்யப்பட்ட பழைய கட்டடங்களுக்கு மற்றும் காலிமனைகளுக்கு வரி சீராய்வு மேற்கொள்வதற்கான உச்சவரம்பு.**

1. 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிப்பு கட்டிடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2. 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிப்பு கட்டிடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3. 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிப்பு கட்டிடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

4. 1801 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிப்பு கட்டிடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

5. வணிகப் பயன்பாட்டுக் கட்டங்களுக்கு தற்போது உள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

6. தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போது உள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7. காலிமனை வரிவிதிப்பிற்கு,1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு.**

சொத்துவரி மற்றும் காலிமனைவரி பொது சீராய்வு செய்ய பொதுமக்களிடமிருந்து 5 ஆட்சேபனை மனுக்கள் மட்டுமே பெறப்பட்டுள்ளதால் நகராட்சி நிதிநிலையினை கருத்தில் கொண்டும் மேட்டூர் நகராட்சி பகுதி பொது மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், நகராட்சியின் நிதிநிலையினை உயர்த்தவும், அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(ந.நி.4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்.01.04.2022-ல் தெரிவித்துள்ளவாறும், இந்நகர்மன்ற தீர்மான எண்.23 நாள்.11.04.2022 ன் படியும் சொத்துவரி மற்றும் காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1809/2022/அ1)**

**தீர்மான எண் 40 நாள் 23.05.2022**

**அனுமதிக்கப்பட்டது**

**3.** மேட்டூர் நகராட்சியில் 15–வது மத்திய நிதிக்குழு 2020–2021 நிதியின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு புதியதாக கூடுதல் BOV வாங்கும் பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.3858/2020/இ1 நாள்.28.03.2022 ல் தகவல் மற்றும் மக்கள்தொடர்பு அலுவலர், மாவட்ட ஆட்சியரகம், சேலம் அவர்களை கோரியதன்படி KAL Publication (P) Ltd நிறுவனம் மூலமாக 31.03.2022 அன்று தமிழ் முரசு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி விளம்பரம் செய்தமைக்கான விளம்பர கட்டணம் ரூ.6400/– பட்டியல் KAL Publication நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்படி விளம்பர கட்டணம் ரூ.6400/–யை KAL Publication (P) Ltd நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3858/2020/இ1)**

**தீர்மான எண் 41 நாள் 23.05.2022**

**அனுமதிக்கப்பட்டது**

4. மேட்டூர் நகராட்சியில் 15 வது மத்திய நிதிக்குழு நிதியின் கீழ் சீத்தாமலையில் உள்ள சுத்திகரிப்பு நீர் சேகரிப்பு தொட்டி மேற்கூரை கான்கிரீட் தளம் மேம்படுத்தும் பணி மற்றும் வார்டு எண்.20ல் உள்ள நேரு நகர் மயானத்தில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகளுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை மாநில அளவிலான தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய கோரி இவ்வலுவலக கடித ந.க.எண்.3858/2020/இ1 நாள்.22.03.2022ல் இயக்குநர், தகவல் மற்றும் மக்கள் தொடர்பு துறை தலைமை செயலகம், சென்னை அவர்களை கோரியதன் படி NIDUS Advertising & Marketing நிறுவனத்தின் மூலம் 27.03.2022 அன்று தீக்கதிர் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி விளம்பரம் செய்தமைக்கான தொகை ரூ.20,107/– வழங்க கோரி தெரிவிக்கப்பட்டுள்ள NIDUS Advertising & Marketing நிறுவனத்தின் 26.04.2022 ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே NIDUS Advertising Marketing நிறுவனத்திற்கு ரூ.20,107/– யை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3858/2020/இ1)**

**தீர்மான எண் 42 நாள் 23.05.2022**
**அனுமதிக்கப்பட்டது**

5. மேட்டூர் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் கட்டப்பட்டு சுமார் 30 ஆண்டுகள் ஆவதால் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் நவீன வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையம் சட்டமன்ற அறிவிப்பு எண் 22–ன் படி மேட்டூர் நகராட்சியில் அமைக்கப்படும் என தெரிவித்ததற்கிணங்க தற்போதைய பேருந்து நிலையத்தின் கட்டிட ஸ்திரத்தன்மை மற்றும் மண் பரிசோதனை செய்து சான்று வழங்க வேண்டுமென்பதால் சேலம், அரசினர் பொறியியல் கல்லூரி, முதல்வருக்கு கடிதம் அனுப்பபப்பட்டதில் பரிசோதனைக்கான கட்டணம் ரூ.1,39,240/– யை (GST உட்பட) செலுத்துமாறு அரசு பொறியியல் கல்லூரி பேராசிரியரும், பொறியியல் கட்டுமான துறைத்தலைவரின் 29.04.2022ந் தேதிய Lr.No.CB 512/GCE/SIM/Civil/2022 கடிதத்தின் படி ரூ.1,39,240/– செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே ரூ.1,39,240/– யை முதல்வர் அரசினர் பொறியியல் கல்லூரி சேலம் அவர்களுக்கு செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1666/2022/இ1)**

**தீர்மான எண் 43 நாள் 23.05.2022**
**அனுமதிக்கப்பட்டது**

6. மேட்டூர் நகராட்சி குள்ளவீரன்பட்டி வார்டு எண்.2 பகுதியில் உள்ள குடிநீர் உந்து நிலையத்தின் மோட்டார் அறையின் ( Pump Room) மேற் கூரை, கதவு ஜன்னல்கள் மற்றும் தரைதளம் ஆகியவை பழுதடைந்து உள்ளதால் சரிசெய்ய வேண்டும். மேலும் 15வது மத்திய நிதிக்குழு நிதியின் கீழ் புதிய மோட்டாகள் நிறுவப்பட வேண்டும்.அதற்கு மோட்டார் அறையில் மேற்கண்ட பழுதுகளை உடனடியாக சரிசெய்யபட வேண்டும். அதற்கான திட்ட மதிப்பீடு ரூ.1.20 க்கு (ஒரு லட்சத்து இருபதாயிரம்) தயார் செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட பழுதுகளை சரிசெய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.20 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்க வேண்டியதை கருத்தில் கொண்டு மேற்படி பணிகளை ரூ.1,20,000/- க்கு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2454/2022/இ1)**

**தீர்மான எண் 44 நாள் 23.05.2022**
**அனுமதிக்கப்பட்டது**

7.இந்நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் எஸ்.எம்.86 மேட்டூர் டான்சி, டாமின் மற்றும் நகராட்சி பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் நாணய சங்கம் லிமிடெட்டில் கடன் பெற்றுள்ளதற்கு தொகையினை சம்மந்தப்பட்டவர்களின் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது 16.12.2021-ம் தேதி வரை தொகை ரூ.57,83,203/-யை சங்கத்தில் செலுத்தகோரி எஸ்.எம்.86 மேட்டூர் டான்சி, டாமின் மற்றும் நகராட்சி பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் நாணய சங்கம் லிமிடெட்டில் செயலாளர் திரு.எம்.பி.குணசேகர், என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.No.1284/2022 வழக்கு தொடர்ந்துள்ளனர். மேற்படி வழக்கில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களை முதல் பிரதிவாதியாகவும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களை இரண்டாம் பிரதிவாதியாகவும், ஆணையாளர் , மேட்டூர் நகராட்சி அவர்களை மூன்றாம் பிரதிவாதியாகவும் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி சென்னை உயர்நீதிமன்ற வழக்கில் மனுதாரர் திரு.எம்.பி.குணசேகர், என்பவர் தொடரப்பட்ட வழக்கின் 01.02.2022ம் தேதிய தீர்ப்புரையில் மூன்று மாதக் காலத்திற்குள் தொகை செலுத்த தீர்ப்பு வரப்பெற்றுள்ளது. நகராட்சி சார்பில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பால்மௌரியா வழக்கினை நடத்தியமைக்கு, வழக்கு கட்டணம் ரூ.15,000/- வழங்க கோரியுள்ளார். மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.17/ 2011 /சி1)**

**தீர்மான எண் 45 நாள் 23.05.2022**

**அனுமதிக்கப்பட்டது**

**8.** மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேட்டூர் டவுன் வார்டு –பி பிளாக் –9 சர்வே எண் .7/1 பரப்பளவு 2.2375.0 சதுர .மீ அரசு புறம்போக்கு நத்தம் என வகைபாடு செய்யப்பட்ட நிலத்தில் 20 செண்ட் அரசு புறம்போக்கு நத்தம் என வகைப்பாடு செய்யப்பட்ட நிலத்தினை மட்டும் மேட்டூர் சார்நிலைக் கருவூல அலுவலகம் கட்ட கருவூலத்துறை மேட்டூர் அவர்களுக்கு நில மாறுதல் செய்ய தீர்மானம் நிறைவேற்றி தருமாறு மேட்டூர் வட்டாசியர் அவர்களின் 04.02.2022ம் தேதிய ந.க.எண்.4409/2021/பி2 கடிதத்தில் கோரியுள்ளார் .

எனவே அரசு புறம் போக்கு நத்தம் என வகைப்பாடு செய்யப்பட்ட மேற்கண்ட நிலத்தில் சார்நிலைக் கருவூல, கருவூலத்துறை மேட்டூர் அவர்களுக்கு நில மாறுதல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.870/2022/எப்1)**

**தீர்மான எண் 46 நாள் 23.05.2022**

**அனுமதிக்கப்பட்டது**

**9.** மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 14.65 Sq.Km பரப்பளவில் இரண்டு குடிநீர் நீரேற்று நிலையங்கள், இரண்டு குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், 7 எண்ணிக்கையிலான மேல் நிலை நீர்தேக்க தொட்டிகள், 3 எண்ணிக்கையிலான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், 11 எண்ணிக்கையிலான கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் கழிவு நீரேற்று நிலையங்கள், 71 கி.மீ நீள கழிவு நீர் குழாய்கள், 2907 எண்ணிக்கையிலான ஆள் இறங்கும் குழிகள், 159.95 கி.மீ நீளமுள்ள குடிநீர் விநியோக குழாய், 3 எண்ணிக்கையிலான தரைமட்ட நீர்தேக்க தொட்டி, 2830 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள், 84.001.கி.மீ நீளமுள்ள நகராட்சி சாலை, 27.30 கி.மீ நீளமுள்ள மழைநீர் வடிகால்கள், நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சேகரமாகும் குப்பைகள் மற்றும் சேகரமாகும் குப்பைகளை 3 எண்ணிக்கையிலான நுண்உயிர் கூடங்களில் பிரித்தெடுக்கும் பணிகள் நகராட்சி எல்லைக்கட்பட்ட பகுதிகளில் வரி மற்றும் வரியில்லா இனங்களின் வரி வசூல் குறித்த ஆய்வு, நகராட்சிக்கு சொந்தமான 4 ஆரம்ப நிலைப்பள்ளிகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு, 28 எண்ணிக்கையிலான சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் 4 எண்ணிக்கையிலான பொதுக்கழிப்பிடங்களின் செயலாக்கம் குறித்து தினசரி ஆய்வு மேற்கொள்ள இரண்டு

எண்ணிக்கையிலான SCORPIO வாகனங்கள் நகரமன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் பயன்பாட்டிற்கு தேவைப்படுகிறது.

தற்போது இரண்டு எண்ணிக்கையிலான ஈப்பு வாகனங்கள் வாகன எண் TN 52 W 4242 ( வாகனம் வாங்கப்பட்ட ஆண்டு–2012 வாகனம் இயக்கப்பட்டுள்ள கிலோமீட்டர் 2,53,266) TN 52 V 4660 (வாகனம் வாங்கப்பட்ட ஆண்டு –2013, வாகனம் இயங்கப்பட்டுள்ள கிலோ மீட்டர் 2,73,820) உள்ளது. எனவே இரண்டு எண்ணிக்கையிலான Scorpio S11 2WD 7STR BSV1 Model, DGST (Directorate General of supplies Transport) இல் கொள்ளமுதல் செய்ய வாகனம் ஒன்றிற்கு உத்தேசமாக ரூ.15,50,000/– ஆகும். எனவே ரூ.15,50,000/– (வாகனம் ஒன்றிற்கு) உத்தேச செலவீனத்தில் இரண்டு எண்ணிக்கையிலான SCORPIO வாகனங்கள் வாங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடம் மானியமாக ஒதுக்கீடு செய்ய கோரியும், நிர்வாக அனுமதி வழங்கக் கோரியும் கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1778/2022/இ1)**

**தீர்மான எண் 47 நாள் 23.05.2022**
**அனுமதிக்கப்பட்டது**

**10.** இந்நகராட்சிக்கு 2022–2023–ம் நிதியாண்டிற்கு அலுவலக உபயோகத்திற்கு தேவையான A4, Legal, A3 பேப்பர், படிவங்கள் மற்றும் பதிவேடுகள், எழுது பொருட்கள் அம்மா உணவகத்திற்கு தேவையான டோக்கன்கள் ஆகியவற்றை தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழில் கூட்டுறவு சங்கத்தில் வாங்கி கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/–க்கும் ( ஐந்து லட்சம்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1112/2021/பி3)**

**தீர்மான எண் 48 நாள் 23.05.2022**
**அனுமதிக்கப்பட்டது**

**11.** இந்நகராட்சிக்கு சொந்தமான சேலம் கேம்ப் ஞாயிறுதோறு கூடும் வாரச்சந்தையில்கட்டணம் வசூல்செய்யும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள்முதல்31.03.2025 முடிய உள்ளகாலத்திற்கு10.05.2022 ல்

மறு பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளிகோரப்பட்டதில், ஏலத்தில்எவரும் கலந்துகொள்ளவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒரு ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **ஒப்பந்தப்புள்ளிகொடுத்தவர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளியில்கோரியஅதிகபட்சதொகை ( ஆண்டு குத்தகைதொகை)** |
|---|---|---|
| 1. | திரு.R.ரமேஷ்வரன்<br>த/பெ.ராஜமாணிக்கம்,<br>5/1-89,R.C.பிளாண்ட்,<br>மேட்டூர் அணை. | ரூ.63,000/- |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மேற்படிஉரிமஇனத்திற்குஒரேஒருஒப்பந்தப்புள்ளிமட்டுமேவரப்பெற்றுள்ளது. திரு.R.ரமேஷ்வரன், மேட்டூர் அணைஎன்பவர் ஆண்டு ஒன்றுக்கு உயர்ந்தபட்சஒப்பந்தப்புள்ளித் தொகையாகரூ.63,000/-க்கு ஒப்பந்தப்புள்ளிகோரியுள்ளார். இவ்வினத்திற்குசென்ற ஆண்டு உரிமத்தொகை ரூ.1,53,300/-ஆகும். மூன்றாண்டுசராசரித் தொகைரூ..1,49,900/-ஆகும். மேற்படிஒப்பந்தப்புள்ளியில்கோரியதொகையானதுசென்றஆண்டைவிடரூ.90,300/-குறைவாகவும், மூன்றாண்டு சராசரியைவிட ரூ.86,900/-குறைவாகவும் உள்ளது. எனவேமேற்படிஉரிமஇனத்திற்கு மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளிகோரிடமன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 2454/2022/இ1)**

**தீர்மான எண் 49 நாள் 23.05.2022**
**அனுமதிக்கப்பட்டது**

**12.** இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு BOV வாகனத்திற்கு லித்தியம் பேட்டரி புதியதாக வாங்கும் பணிக்கு ரூ.**6,00,000/–** மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் **12.04.2022–**ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | M/S. ஜெகத் இண்டஸ்ட்ரீஸ் | ரூ.**4,49,000/–** | **(–) 21.23** % மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/S. பிரியம் இண்டஸ்ட்ரீஸ் | ரூ.**5,51,470/–** | **(–) 3.25** % மதிப்பீட்டை விட குறைவு |
| 3 | M/S. ஆதவன் மோட்டார்ஸ் | ரூ.**5,89,900/–** | **(+) 3.49** % மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | |
|---|---|---|---|
| 4 | M/S.அருண் இண்டியன் மோட்டார்ஸ் | ரூ.5,67,890/– | (–) 0.37 % மதிப்பீட்டை விட குறைவு |
| 5 | M/S.கோவை கீரின் ரைடு | ரூ.5,90,000/– | (+) 3.51 % மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

வரப் பெற்றுள்ள 5 எண்ணிக்கை ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விகிதத்தை விட 21.23 % (-) சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதம் கொடுத்துள்ள M/S. ஜெகத் இண்டஸ்ட்ரீஸ், கோவை ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.3858/2021/இ1)**

**தீர்மான எண் 50 நாள் 23.05.2022**
**அனுமதிக்கப்பட்டது**

**13.** திட்டக்கழிவு மேலாண்மை பணிக்காக புதியதாக BOV வாகனங்கள் 6 எண்ணிக்கை வாங்கும் பணிக்கு 19.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|
| 1 | M/S. பிரியம் இண்டஸ்ட்ரீஸ் இன்ஞ்னியரிங் பிரைவிட் லிட்,தாரபுரம் |
| 2 | M/S.அருண் இந்தியன் மோட்டார்ஸ், சேலம் |
| 3 | M/S. ஆதவன் மோட்டார்ஸ், திருப்பூர் |
| 4 | M/S. ஜெகத் இண்டஸ்ட்ரீஸ், கோயம்புத்தூர் |
| 5 | M/S.கோவை கீரின் ரைடு, கோயம்புத்தூர் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் Technical Bid திரக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி தகுதியற்றதாக உள்ளது.

| வ.எண் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|
| 1 | M/S. பிரியம் இண்டஸ்ட்ரீஸ் இன்ஞ்னியரிங் பிரைவிட் லிட்,தாரபுரம் |

| | |
|---|---|
| 2 | M/S.அருண் இந்தியன் மோட்டார்ஸ், சேலம் |
| 3 | M/S. ஆதவன் மோட்டார்ஸ், திருப்பூர் |

மேற்கண்ட தகுதியற்ற ஒப்பந்தப்புள்ளி நீங்கலாக கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி தகுதியானதாக உள்ளது.

| வ.எண் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|
| 1 | M/S. ஜெகத் இண்டஸ்ட்ரீஸ், கோயம்புத்தூர் |
| 2 | M/S.கோவை கீரின் ரைடு, கோயம்புத்தூர் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தார்களையும் இவ்வலுவலக ந.க.எண்.3858/2021/இ1 நாள்.27.04.2022 கடிதத்தின்படி விலைப்பட்டியல் திறக்க 02.05.2022 அன்று நேரில் வரவழைக்கப்பட்டு திறக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வழுங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/S. ஜெகத் இண்டஸ்ட்ரீஸ், கோயம்புத்தூர் | ரூ.12,90,000/– | (+) 7.5 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | M/S.கோவை கீரின் ரைடு, கோயம்புத்தூர் | ரூ.12,59,000/– | (+) 4.92 % மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 4.92% (கூடுதலாக) குறைவாக வழங்கியுள்ள M/S.கோவை கீரின் ரைடு, அவர்களுக்கு விலை குறைப்பு செய்ய 05.05.2022 அன்றுனு கடிதம் அனுப்பட்டதில் ஒப்பந்ததாரர் தனது 12.05.2022–ந் தேதிய கடிதத்தில் 0.01% மதிப்பீட்டை விட குறைவாக பணியினை மேற்கொள்ள இசைவு தெரிவித்துள்ளார்.

ஒப்பந்ததாரர் வழங்கியுள்ள 0.01% மதிப்பீட்டை விட குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்ததினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3858/2022/இ1)**

**தீர்மான எண் 51 நாள் 23.05.2022**

**அனுமதிக்கப்பட்டது**